**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் O.S.No.322/2014 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.V.பிரதாப், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | சம்பத்குமார் | தொழில் |
| த.பெ. | | மதம் |
| கிராமம் | | சாதி |
| வயது | | வட்டம் |

**முதல் விசாரணை - 24.06.2024**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 7 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. Ex.A.1 – Original Bank Statement pertaining to the month of October 2011.
2. Ex.A.2 – Original Cheque bearing No.001757, dated 09.09.2014 drawn on City Union Bank, Tambaram Branch, Chennai-45 dated 09.09.2014.
3. Ex.A.3 – Office copy of Legal Notice issued by the plaintiff dated 28.09.2014.
4. Ex.A.4 – Original Postal Acknowledgement.
5. Ex.A.5 – Original Return Memo dated 12.11.2014.
6. Ex.A.6 – Certified copy of sale deed Doc.No.4366/2008 in favour of defendant dated 23.05.2008.
7. Ex.A.7 – Certified copy of Encumbrance Certificate from 2008 to 2014 dated 07.11.2014.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞா் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**O.S.No.322/2014 P.W.1-சம்பத்குமார் 01.10.2024**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் இன்டீரியர் டெக்ரேஷன் தொழில் செய்து வருகிறேன். எத்தனை வருடமாக மேற்படி தொழிலை செய்து வருகிறேன் என்றால் 35 வருடமாக செய்து வருகிறேன். நான் தனிப்பட்ட முறையில் உரிமையாளர் என்ற முறையில் மேற்படி தொழிலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்துள்ளேன், அந்த பணத்தை கேட்டு இந்த வழக்கை போட்டுள்ளேன். பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 1995ல் இருந்து பிரதிவாதியை தெரியும். பிரதிவாதியை எனக்கு நல்ல அறிமுகமும், பழக்கமும் உண்டு என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு அறிமுகமானபோது, அவர் என்ன தொழில் செய்து வந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், பிரதிவாதி Coco cola, Nesley. Amul Ice Cream-ல் Agent ஆகவும் மற்றும் பிரிட்டானியா கம்பெனியில் 5, 6 லாரி வைத்து தொழில் செய்து வந்தார். பிரதிவாதி எனக்கு தெரிந்து தொழிலை நல்ல முறையில் நடத்தி வந்தார் என்றால் எனக்கு பிரதிவாதி அறிமுகமானபோது Nesley. Amul Ice Cream தொழிலை நல்ல முறையில் நடத்தி வந்தார். பிரிட்டானியா கம்பெனியில் லாரிகளில் லோடுகளை ஏற்றிக் கொண்டு நல்ல முறையில் தொழில் நடத்தி வந்தார். பிரதிவாதி மேற்படி தொழில்களை நல்ல லாபமுறையில்தான் நடத்தி வந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் பிரதிவாதி சொல்லி எனக்கு தெரியும். பிரதிவாதியின் தொழில் நல்ல லாபகரமான முறையில் நடந்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றும், அதனை மறைத்து நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இன்டீரியர் டெக்ரேஷன் தொழிலை 35 வருடங்களாக நடத்தி வந்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்குண்டான ஆவணங்களை நான் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். நான் 35 வருடங்களாக இன்டீரியர் டெக்ரேஷன் தொழில் செய்து வருவதால் வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் வருமான வரி தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடத்திலிருந்து வருமான வரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2001ல் இருந்து வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன். நான் 35 வருடமாக இன்டீரியர் டெக்ரேஷன் தொழில் செய்து வருவதாக சொல்லியுள்ளதால், நான் சட்டத்திற்கு

புறம்பாக இன்டீரியர் டெக்ரேஷன் தொழில் செய்து வருகிறேனா என்றால் 2001ம் ஆண்டிற்கு முன்பு என்னுடைய தொழிலானது வருமான வரி கணக்கிற்குள் வராததால் வருமான வரி தாக்கல் செய்யவில்லை. 2001க்கு முன்பு என்னுடைய ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் ஆண்டு வருடம் ரூபாய் 1 லட்சம் முதல் 1 1/2 லட்சம் இருக்கும். எனக்கு 2001ம் ஆண்டு, ஆண்டு வருமானம் ரூபாய் 1 லட்சம் முதல் 1 1/2 லட்சம் வருகிறது என்பதை காண்பிக்க Zero balance வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய வருமானமானது வருமான வரி கணக்கிற்கு கீழே வந்தபோது வருமான வரி கணக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் வட்டிக்கு விடும் தொழிலும் செய்து வருகிறேன் என்றால் இல்லை, இன்டீரியர் டெக்ரேஷன் தொழில் மட்டும்தான் செய்து வருகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)